செ.வெ.எண் : 09/ செப்டம்பர் நாள் : 04.09.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி அரவை செய்து வழங்க தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**
**மாவட்டஆட்சித் தலைவர்**
**முனைவர்ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் தரமான கண்டுமுதல் அரிசி வழங்கிடும் பொருட்டு நடப்பு கொள்முதல் பருவம் 2020-2021 -ல் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை கழக நவீன அரிசி ஆலைகள் மற்றும் கழகத்தில் அரவை முகவர்களாக செயல்பட்டு வரும் தனியார் அரவை ஆலைகள் மூலம் அரவை செய்து தரமான அரிசியினை பொதுவிநியோத்திட்டத்திற்கு வழங்கி வருகிறது. மண்டலங்களில் கூடுதலாக இருப்பில் உள்ள நெல்லினை கழகத்தில் இணையாத தனியார் புழுங்கல் அரவை ஆலைகள் மூலம் கழக நிபந்தனைகளுக்கு உட்பட்டு ”ஒரு முறை திட்டத்தின் கீழ்” 15.09.2021 முதல் 15.11.2021 வரை அரவை செய்து கண்டுமுதல் அரிசியினை கிடங்கில் ஒப்படைப்பு செய்திட ஏதுவாக தனியார் புழுங்கல் அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 03.09.2021 முதல் வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தில் இணைய விரும்பும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தரமான அரிசியை அரவை செய்து வழங்க ஏதுவாக அரிசி ஆலைகளில் கலர் சார்ட்டர் உள்ளிட்ட நவீன அரவை கட்டமைப்பு வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், கூடுதல் விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட மண்டல மேலாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**